## முத்தமிழறிஞர் கலைஞரால் நிர்மாணிக்கப்பட்ட – சென்னை மாநகரின் கலைச் செல்வம்! ரூ.80 கோடியில்

# புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## முதல் நிகழ்ச்சியாக – மாற்றுத் திறனாளிகள் திரண்டு வந்து – முதல்வருக்குப் பாராட்டு விழா நடத்தினர்!



**சென்னை, ஜீன் 22-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.80 கோடியில் புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை பொதுமக்களின் பார்வைக்கு நேற்று (21.6.2025) மாலை திறந்து வைத்தார்.**

**புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக 60க்கும் மேற்பட்ட அரசாணைகள் பிறப்பித்து சலுகைகள் வழங்கியதற்காக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளும் திரண்டு முதலமைச்சர் அவர்களுக்கு மாபெரும் பாராட்டு விழாவும் நடத்தினார்.**

அதன் விபரம் வருமாறு:-

பூம்புகார் பெருந்தச்சன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1974, 1975 ஆகிய ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டது சென்னை மாநகரின் கலைச்செல்வம் வள்ளுவர் கோட்டம். இந்த வள்ளுவர் கோட்டம் சுற்றுலா மையமாக எழுச்சிபெற்று உலகத் தமிழ் அறிஞர்களாலும், தமிழ்நாட்டு மக்களாலும் பெரிதும் பாராட்டப்படுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வள்ளுவர் கோட்டத்தின் முன் நிறுவப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவருடைய பிறந்த நாளின் போது மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதற்காகச் சென்றபோது, வள்ளுவர் கோட்டத்தின் உள்ளே சென்று பார்வையிட்டார்கள்.

அப்போது, முந்தைய 10 ஆண்டுகால ஆட்சியில் பராமரிக்கப்படாமல் பாழ்பட்டிருந்த வள்ளுவர் கோட்டத்தின் தோற்றத்தைப் பார்த்து மிகவும் நொந்து வேதனைக்கு ஆளானார்கள். அதனைத் தொடர்ந்து தலைமைச் செயலகம் வந்த பின், அதிகாரிகளை அழைத்து வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பித்திட வேண்டும் என்ற உணர்வோடு திட்டமிட்டு ரூ.80 கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் நடைபெறும் என்று அறிவித்து நிதி ஒதுக்கீடு செய்தார்கள்.

### எழிற்கோலம்!

அதன் பயனாக, வள்ளுவர் கோட்டம் புதுப்பிக்கப்பட்டு எழிற்கோலம் கொண்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டு இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தக்க வகையில் வடிவமைக்கப்பட்டு 20,000 சதுர அடிகள் பரப்பளவில் 1,548 இருக்கைகளுடன் அதிநவீன வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட பிரம்மாண்டமான “அய்யன் வள்ளுவர் கலையரங்கம்” மேம்படுத்தப்பட்டுள்ளது.



சிற்பத் தேர்

### குறள்மணி மாடம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உரை விளக்கத்துடன் 1,330 திருக்குறள்களையும் கொண்ட குறள் பலகைகள் அமைக்கப்பட்டு - ஓவியங்களுடன் புதிய வடிவம் பெற்றுள்ளது “குறள் மணிமாடம்”

100 பேர் அமரும் வசதியுடன் “திருக்குறள் ஆய்வரங்கம் மற்றும் ஆராய்ச்சி நூலகம்” இலக்கிய விவாதங்கள் ஆவணப்பதிவு மற்றும் கல்வி ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

27,000 சதுர அடி பரப்பில் தரை நிலை, தரையின் கீழ் நிலப்பகுதிகளில் 162 கார்கள் வரை நிறுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



அய்யன் வள்ளுவர் கலையரங்கம்

வள்ளுவர் கோட்டத்தைப் பார்வையிட வருகைபுரியும் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் 3,336 சதுர அடியில் உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

உணவகப் பகுதியில் 72 பேர் அமரவும், காபி அருந்தும் பகுதியில் 24 பேர் அமரவும் கூடிய வசதிகளைக் கொண்டுள்ளது.

275.56 சதுர அடி பரப்பளவு கொண்ட நினைவுப் பொருள் மற்றும் பரிசுப் பொருள்களுக்கான விற்பனையகமும் அருகே அமைக்கப்பட்டுள்ளது.

### வேயா மாடம்!

திருவள்ளுவர் சிலையை நோக்கிப் பார்வையாளர்கள் தடையின்றிச் செல்வதற்கு வசதியான மூடிய நடைபாதையுடன் கூடிய “வேயா மாடம்” ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருவாரூர்த் தேர் வடிவில் 106 அடி உயரமுடைய திருக்குறள் கருத்துகளை விளக்கும் சிற்பங்கள் நுட்பமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள கல் தேர் ஒலிஒளி தொழில்நுட்பத்தில் மிளிரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

பார்வையிடும் பொதுமக்கள் உள்ளம் மகிழும் வகையில் இசை நீரூற்றுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மகத்தான முறையில் புனரமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டம் நேற்று மாலை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

### முதலமைச்சருக்கு பாராட்டுத் தெரிவிக்கும் மாற்றுத் திறனாளிகள்!

புனரமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக நேற்று மாலை, மாற்றுத் திறனாளிகள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டு விழா நடத்தினார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் பயன்தரத்தக்க வகையில் 60க்கும் மேற்பட்ட அரசாணைகளை பிறப்பித்திருக்கிறார்கள்.

உள்ளாட்சி நிறுவனங்களில் 13,988 மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இதுவரை மெரினா, பெசன்ட் நகர், ஆகிய பகுதிகளில் மாற்றுத் திறனாளிகள் எளிதில் கடல் நீரைத் தொட்டு கால்பதித்து மகிழத்தக்க வகையில் இரண்டு அணுகுசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நிலைநாட்ட சிறப்பு ஆணையம், விபத்து நிவாரணத் தொகை உயர்த்தி வழங்கியமை, நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி, பார்வையற்ற மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி அளிக்கும் சிறந்த ஆசிரியர்களுக்கு மாநில விருதான “ஹெலன் கெல்லர்” விருது வழங்குதல்,

ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் இணைப்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம், முனைவர் பட்டத்திற்குப் படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் ஊக்கத் தொகை, மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்களுக்கு துறைத் தேர்விலிருந்து விலக்கு,

வணிக வளாகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு 5 சதவீத கடை ஒதுக்கீடு, மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் ரூ.1,000 என்பது ரூ.1,500 ஆக உயர்த்தியது,

கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித்தொகை ரூ.1,500 என்பது ரூ.2,000 ஆக உயர்த்தியமை, மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கியது உட்பட அனைத்துச் சலுகைகளுக்கும் அரசாணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ‘மாற்றுத்திறனாளிகள்’ எனும் பெயரைச் சூட்டி, அவர்கள் மனதிலிருந்த குறைகளை அகற்றியவர் என்பதை நினைவுகூரும் இந்த வேளையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் சமூகப் பொருளாதார நிலைகள் உயரும் வகையில் இதுவரை எந்த அரசும் செய்திடாத பல புதிய சலுகைகளை வழங்கி மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் வளம் சேர்த்துள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் வழங்கிய எண்ணற்ற சலுகைகளை நினைந்து மகிழ்ந்து தமிழ்நாட்டில் உள்ள மாற்றுத்திறனாளிகள் அனைவரும் ஒன்று கூடி

**பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி.**

(விதிப்பயனால் பழி ஏற்படும் என்பது தவறு, அறிய வேண்டியவற்றை அறிந்து செயல்படாமல் இருப்பதே பெரும்பழியாகும்.)

என்ற குறளுக்கு ஏற்ப

வள்ளுவர் கோட்டத்தில் மிகப்பெரிய நன்றி அறிவிப்புப் பாராட்டு விழா நடத்தினார்கள்.

மாற்றுத்திறனாளிகளின் பாராட்டு விழா புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக நேற்று (21.6.2025-சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் கோலாகலமாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



குறள்மணி மாடம்

## சபதத்தை நிறைவேற்றிக்கொண்ட சாதனையாளர்!

வள்ளுவர் கோட்டம் திறப்பு விழாவிற்கு கலைஞரை அழைக்காவிட்டால் என்ன? காலச்சக்கரம் சுழன்றபோது, 1989ல் கலைஞர் அவர்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்தபோது, பதவியேற்பு விழாவை அதே வள்ளுவர் கோட்டத்தில் நடத்தி, தன் சபதத்தை நிறைவேற்றிக் கொண்டது, வரலாற்றில் நீக்கமற நிறைந்த நிகழ்வன்றோ!

“சரித்திரத்தில் நமக்குக் கிடைக்கிற இடம், சலுகையால் பெறக்கூடியது அல்ல” என்ற கலைஞரின் உறுதிமிக்க வார்த்தைகளே இன்றும், தி.மு.க.வை உரமேற்றிக் கொண்டிருக்கிறது என்றால் அது மிகையன்று!

## ‘கோட்டம் திறக்கப்படுகிறது! குறளோவியம் தீட்டப்படுகிறது!’



மிசாவின் இரும்புக் கரங்களில் தமிழ்நாடு சிக்கியபோது, அப்போதைய குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமத், வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைத்தார். அப்போது வள்ளுவர் கோட்டத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் பார்த்துப் பார்த்துச் செதுக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு முறையான அழைப்பு இல்லை. அந்த நாளில் “கோட்டம் திறக்கப்படுகிறது, குறளோவியம் தீட்டப்படுகிறது” எனும் தலைப்பில் முரசொலியில் உடன்பிறப்புகளுக்கு கலைஞர் அவர்கள் எழுதிய கடிதம் ஒரு வரலாற்றுப் பெட்டகம் ஆகும். அந்த அளவுக்கு உணர்ச்சிப் பிழம்புகள் ஊடுருவியிருந்த உடன் பிறப்புக் கடிதம் அது!

தந்தை எழுப்பிய இந்த வரலாற்றுச் சின்னத்திற்கு, மேலும் பொலிவூட்டி இன்று சிறப்பு சேர்த்துள்ளார், அவர்தம் தனயன் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

இந்த இனிய தருணத்தில், “கோட்டம் திறக்கப்படுகிறது! குறளோவியம் தீட்டப்படுகிறது!” என, 15.4.1976 அன்று ‘முரசொலி’யில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தீட்டியிருந்த அந்த உருக்கமிகு கடிதத்தின் ஒரு சில பகுதிகளை எடுத்து வெளியிடுவது சாலப் பொருத்தமன்றோ!

“கலைஞரின் கடிதங்கள்” இரண்டாவது தொகுதியில் இடம் பெற்றுள்ள, அக்கடிதத்தின் முக்கியப் பகுதி வருமாறு:-

**உடன்பிறப்பே,**

**ஆறு, நீரின்றி வறண்டு கிடப்பது போல் தோன்றும். “ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளில் ஊற்றுப் பெருக்கால் உல கூட்டும்” என்ற பாடலை கவனி! வறண்டுபோன ஆற்றுக்கு அடியிலேயும் குளிர் நீர் ஊற்று இருப்பதுபோல - நமது அடையாளங்களே இல்லாமற் போய் விட்டாலும் நிலத்தடியில் இருக்கின்ற நீர்ஊற்றுபோல, நமது கொள்கை-நமது உழைப்பு - நமது தியாகம் - நமது சாதனை-அனைத்தும் உணர்வு பூர்வமாக இருந்தே தீரும்.**

**எனவே சரித்திரத்தில் நமக்குக் கிடைக்கிற இடம், சலுகையால் பெறக்கூடியது அல்ல! எது நேர்ந்தாலும், என்ன நேர்ந்தாலும் மறைக்க முடியாத இடம்! அந்த நம்பிக்கையுடன்தான் இன்று நடக்கும் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன்.**

**உயிர்வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து பிறந்த குழந்தையைச் சுமந்ததையும் இன்பமாகக் கருதி, பேற்றுக் கால வேதனையையும் இனிய வேதனையாகக் கொண்டு; பாலூட்டிச் சீராட்டிப் பழமுத்தம் சுளை சுளையாய்த் தந்து, பள்ளிக்கனுப்பி, பின்னழகும் முன்னழகும் பார்த்துக் களித்து, பருவமடைந்த பின்னர் வாழ்க்கைத் துணையொன்றைத் தேர்ந்தெடுத்து அந்த ஆசைக் கிள்ளைக்கு இனிய திருமண விழா நடைபெறும்போது, தாலி கட்டும் காட்சியினைக் காணமுடியாமல் மணப்பந்தலுக்கு வெளியே நிற்கின்ற தாயின் மனதில் ஒருவிதத் தவிப்பு இருந்தாலும், தன் அன்புச் செல்வத்துக்கு நடைபெறும் மண விழா குறித்த மகிழ்ச்சி பொங்கிடத்தானே செய்யும்!**

**என் தங்க உடன்பிறப்பே! அந்தத் தாயின் மகிழ்ச்சியைத் தான், நான் பெறுகிறேன் இன்று!**

**ஆம்; என் வாழ்நாளின் குறிக்கோள்களில் ஒன்றான வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன், ஆனந்தப் பள்ளு பாடுகிறேன்.**

“நெடுநாள் ஆசை நிறைவேற்றம்
நெஞ்சில் இன்பக் கொடியேற்றம்”

**நீயும் சேர்ந்து பாடுக! இந்த மகிழ்ச்சிப் பாடலை!**

**வாழ்க வள்ளுவர்! வெல்க குறள்நெறி!**

**-அன்புள்ள,**

**மு.க.**

**15.04.1976**